நக்கீரர் தனித்தமிழ்க் கழக வெளியீடு க

தமிழ் நாட்டுக்கு இந்தி மொழி வேண்டுமா ?

இந்தி மொழி பள்ளிகளுக்குக் கட்டாயம்

இந்தி மாணவர்களுக்குக் கட்டாயம் இல்லையெனினும் நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டாயம் ஆகிவிட்டது.

அதோடு நிற்குமா? தமிழர் தூங்கினால், இனி மாணவர் கட்குங் கட்டாயம் ஆகிவிடும். இப்போது இரண்டு, மூன்று, நான்காம் பாரங்களில் இந்தி விருப்பப் பாடமாக வைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்கள் அதனை நாகரி, உருது என்ற இரண்டு வரிவடிவுகளிலும் பயிலுதல் வேண்டும்.

இந்த முறையில் இந்தி தமிழ்ப் பள்ளிகளில் நுழைக்கப்பட்டதற்குக் காரணம் யாதெனின் முன்பு கட்டாய இந்திக்கு ஏற்பட்ட பெருங் கிளர்ச்சிக்கு அஞ்சியும், மகம்மதியருக்கு அஞ்சியும், வடநாட்டுத் தலைவர் ஆணைக்கு அஞ்சியும் எனக் கூறவேண்டுமே யன்றிப் பிறிதில்லை.

தமிழ்நாட்டுக் காங்கிரசத் தலைவர்களுக்கு இந்தி தெரியுமா?

தமிழ் மக்கள் தாமே விரும்பி இந்தியை வரவேற்கவில்லை. வடநாட்டுக் காங்கிரசுத் தலைவர்களின் அரசியல் சூழ்ச்சியினாலேயே இந்தி தமிழ்நாட்டில் பரவத் தொடங்கிற்று. அவர்களால் சென்னையில் 'தட்சிண பாரத இந்தி பிரசார சபை' ஒன்று இருபத்தைந்து ஆண்டுகட்குமுன் நிலைபெறுத்தப்பட்டு அன்றுமுதல் இந்தி பரப்பப்பட்டு வருகின்றது. அப்போது அது நிலைபெறுவதற்குத் தமிழ்மக்கள் இடங்கொடுத்தமை மிக்க தவறாகும்.

1946 சனவரி இறுதியில் இந்திப்பிரசார சபையின் வெள்ளிவிழாக் கொண்டாட்டம் சென்னையில் நடைபெற்றதும் காந்திப் பெரியார் அதன்பொருட்டுச் சென்னைக்கு வந்ததும் தமிழ்மக்கள் அறிவார்கள். இருபத்தைந்து ஆண்டுகள் இந்தியைப் பரப்பியும் இன்று எத்தனை பேர்களுக்கு இந்தி பேசத்தெரியும்? எந்தக் குலமக்கள் அதனை விரும்பிக் கற்று வருகின்றனர்? எந்தக் குலத்தினர் அதனால் வயிறு வளர்த்து வருகின்றனர்? என்பன ஆராய்ந்து அறியத்தக்கவை.

1937ல் திரு இராசகோபாலாச்சாரியார் சென்னை முதன் மந்திரியாக இருந்தபோது தமிழ்நாட்டுப் பள்ளிகள் சிலவற்றில் ஒன்று முதல் மூன்றுபாரங்கள் வரை இந்திமொழி கட்டாயப் பாடமாக வைக்கப்பட்டது அப்போது தமிழ்நாட்டில் அதற்குப் பெரிய எதிர்ப்புத் தோன்றிற்று. ஆயிரத்துக்கு மேற்பட்ட ஆடவரும் பெண்டிரும் அதனை எதிர்த்துச் சிறைக்கூடம் சென்றனர். பின்னர்க் கட்டாயம் ஒழிந்தது.

இப்போது ஆட்சியிலிருக்கும் தமிழ் மாகாண அமைச்சர்கட்கும், தமிழ்நாட்டுக் காங்கிரசு கமிட்டித் தலைவர்க்கும், மற்றுமுள்ள காங்கிரசுத் தொண்டர்கட்கும் இந்தி தெரியாது. 1942ல் சிறைக்கூடத்தில் இருந்த காலத்தில் இவர்கள் திருக்குறள், சிலப்பதிகாரம், பெரியபுராணம் முதலிய செந்தமிழிலக்கியங்களைக் கற்றார்களேயன்றி இந்திமொழியைக் கற்றார்களில்லை. இதிலிருந்து தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர்கட்கு இந்தியில் உள்ளபடி பற்றில்லை என்பது நன்கு தெளிவாகின்றது

திரு இராசகோபாலச்சாரியார் சிறை செல்லாவிடினும் அந்தக் காலத்தில் அவர் வடநாட்டுக்குப் பன்முறை சென்று வந்தனர். அப்போதாவது அவர் இந்தி கற்றாரில்லை. 24-1-46ல் காந்திப் பெரியார் வெள்ளிவிழாவிற்காகச் சென்னைக்கு வந்தபொழுது, "நான் இந்தியில் பேசியதைத் திரு ராஜாஜி கூட நன்கு விளங்கிக் கொள்ளவில்லை அவர் இங்கே உங்களிடம் தமிழில் பேசுகின்றார். தமிழ் மாகாணத்தைவிட்டு வெளியே

சென்றால் ஆங்கிலத்தில் பேசுகின்றார். ஆங்கிலத்தில் நன்றாய்ப் பேசுபவர்களில் ராஜாஜியும் ஒருவர் எனப் பெயர் பெற்றிருக்கிறார். ஆனால் அவர் இந்தியில் பேசக் கற்றுக்கொள்ளவில்லை,'' என்று பேசியதைச் செய்தித்தாளில் பார்த்திருப்பீர்கள். (24—1—46 இந்தியன் எக்ஸ்பிரஸ்)

தமிழ்நாட்டுக் காங்கிரசுத் தலைவர்கள் தாங்களே இந்தியைக் கற்றுக் கொள்ளாதபோது வடநாட்டுத் தலைவர்கட்கு அஞ்சி இந்தியைத் தமிழ்நாட்டுப் பள்ளிகளில் பாடமாக அமைப்பானேன்?

தமிழ்நாட்டு மொழிக்கல்வி

பள்ளிகளில் தாய்மொழியாகிய தமிழைக் கற்பதோடு, எல்லாப் பாடங்களையும் தமிழ்வாயிலாகவே கற்கவேண்டும். முதற் பாரத்தில் ஆங்கிலம் கற்கத் தொடங்குதல் வேண்டும். அதை நன்கு எழுதிக் கற்குமுன்னரே இரண்டு மூன்று நான்காம் பாரங்களில் இந்தியை விருப்பப் பாடமாக இரண்டு வரிவடிவுகளில் கற்கலாம் எனக் கல்விமுறை அமைக்கப்பட்டுள்ளது.

சென்னைக் கல்வியமைச்சரவர்கள் தமிழ்நாட்டில் தமிழ் முதன்மொழி என்றும், ஆங்கிலம் இரண்டாவதுமொழி என்றும் சொன்னார்களேயன்றி, அதற்கான ஏற்பாடுகள் ஒன்றையும் இதுகாறும் செய்தார்களில்லை. தமிழ் முதன்மொழி என்றால் தமிழ்நாட்டு அரசியல்மொழி தமிழாகவே இருத்தல் வேண்டும். தமிழாசிரியர்களின் நிலையும் ஊதியமும் உயர்த்தப்படல் வேண்டும். தமிழ் அரசியல்மொழி ஆதற்குரிய அடிப்படை வேலை ஒன்றும் இதுவரை தொடங்கப்பெறவில்லை. தமிழ்க்கல்வி உயர்த்தப்படவில்லை; ஆனால் ஆங்கிலக்கல்வி தளர்த்தப்படுகின்றது. எனவே தமிழ்நாட்டுக் கல்வி முறை ஒரே குழப்பமாயிருக்கின்றது. தமிழ் மாகாணப் பிரிவினைக்குமுன் தமிழ்மொழியை முதல்மொழியாகவும், அரசியல் மொழியாகவுஞ் செய்வது இயலாததொன்றேயாகும்.

இந்தி பொது மொழியாகுமா?

இந்தியாவின் வடபகுதியில் பல்வேறு மொழிகள் ஒன்றுக்கொன்று மாறுபட்டு வழங்கிவருகின்றன. அவற்றுள் இந்தியும் ஒன்று பஞ்சாபி, சிந்தி, குசராத்தி, ராசபுதானி, நேபாலி, உரியா, பங்காளி, மராட்டி, காஷ்மீரி, உருது, இந்தி முதலிய மொழிகளில் ஒன்றைத் தெரிந்தவர் இன்னொன்று பேசினல் விளங்கிக் கொள்ளமாட்டார். தென்னிந்தியாவில் தமிழ், தமிழினின்றும் பிரிந்துபோன தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் இவற்றில் ஒன்றைத் தெரிந்தவர் பிறிதொன்று பேசினல் விளங்கிக் கொள்ளமாட்டார். மேலும் அஸாமியர், வங்காளத்தார், பஞ்சாபியர் முதலியோர் இந்தியைப் பொது மொழி எனத் தாங்கள் ஏற்றுக்கொள்ள வில்லை 'மார்டன் ரிவியூ' என்ற வங்காளத் திங்கள் வெளியீடு இந்தியாவுக்கு இந்தி எவ்வகையிலும் பொது மொழியாக முடியாது என எழுதியுள்ளது. வங்காளத்தார்க்கு இந்தி பேசினல் விளங்காது. இந்தி தெரிந்தவர்க்கு வங்காளமும் விளங்காது.

எடுத்துக்காட்டாக இந்தி நன்கு தெரிந்த காந்திப் பெரியார்க்கு வங்காளமொழி விளங்கவில்லை. அவர் இந்தியில் பேசுவது வங்காளத்தார்க்கு விளங்கவில்லை. எனவே அவர் இந்தியில் பேசுவது வங்காளத்தில் மொழிபெயர்த்துச் சொல்லப் படுகிறதாகவும் அவர் இப்போது வங்காள மொழியைப் பேசவும் எழுதவும் பயின்று வருகிறதாகவும் 24—11—46 'இந்து' கூறுகின்றது.

ஆகவே, வடநாட்டில் ஒன்றுக்கொன்று மாறுபட்ட வெவ்வேறு மொழியாளர்களெல்லாம் இந்தியில் பேசினல் விளங்கிக் கொள்வார்களென்பது தமிழ் மக்களை ஏய்ப்பதற்குரிய பொய் புனைந்த புரட்டுரையேயாகும்.

இந்தி, உருது முதலிய வடநாட்டு மொழிகள் தமிழைப் போல் பழமையானவைகள் அல்ல, உயர்ந்த திருந்திய இலக்கண இலக்கியங்களையும் கொண்டவைகளும் அல்ல. வடநாட்டில்

மொகலாய அரசாட்சி பரவிய காலத்தில் பிராகிருதச் சிதைவாக வழங்கிய ஒரு மொழியினின்றும் உருது மொழி கிளைத்தது. அராபி மொழி பாரசீக மொழிச் சொற்கள் மிகுதியாய்க் கலக்கப்பெற்ற பிராகிருத மொழியே உருது ஆகும். மற்றும் இந்திமொழி அராபிய பாரசீகச் சொற்களை அறவே நீக்கிச் சமஸ்கிருதச் சொற்களை மிகுதியாய்க் கலந்து உருதுவினின்றும் பிரித்துப் புதிதாய் ஆக்கப்பட்டதொரு மொழியாகும்.

மேலும் இந்தியில் இற்றைக்கு 475 ஆண்டுகளுக்கு முன் இலக்கியம் ஒன்றுமே கிடையாது. இராமனை முழுமுதற் கடவுளாக வைத்து இராமானந்தர் பாடிய பாடல்களே இன்று இந்தியில் 'ஆதிகிரந்தம்' என வழங்கி வருகின்றது. அதன் பின்னர் இந்தியில் எழுதப்பெற்ற துளசிதாசர் இராமாயணமும் சிறந்த இலக்கியமாகப் பாராட்டப்படுகின்றது. இந்தியில் ஆரியக் கதைகள் ஆரியக் கொள்கைகள் நிறைந்த நூல்களே எழுதப்பட்டு வழங்குகின்றன.

பண்டுதொட்டே உயர்ந்த நாகரிகப் பண்பையுடைய தமிழ் மக்கள் ஒன்றுக்குமற்ற இந்தி மொழியைக் கற்பது மிக்க இழிவாவதோடு வீண் காலக்கழிவும், வீண் பொருட்செலவு மாகும். இந்தியாவிற்கு இந்தியைப் பொதுமொழி ஆக்குவதை விட ஐயாயிரம் ஆண்டுதொட்டே வழக்காற்றில் இருந்துவரும் சீரிய செந்தமிழ் இலக்கண இலக்கியங்களையுடைய பண்பு நிறைந்த சொல்வளம் பொருள்வளமிக்க இனிமைவாய்ந்த நாலாயிர மாண்டுகட்குமுன் இந்தியப் பொதுமொழியாயிருந்த தமிழ் மொழியை இப்போது இந்தியப் பொதுமொழி ஆக்கினால், இந்திய மக்கள் 'யாதும் ஊரே யாவருங் கேளிர்' என்ற பண் பாட்டோடு ஒரு குடும்பம்போல் ஒன்றுபட்டு நலமுற வாழ்வர் என்பது திண்ணம்.

இந்தி மொழிக் கல்வியை உருதுவைத் தாய்மொழியாக உடைய மகம்மதியர் முற்றிலும் வெறுக்கின்றார்கள். அதற்குக் காரணம் இந்தி மொழி இந்து சமயத்தை வளர்ப்பதற்கேற்பட்ட

மொழி என்று அவர்கள் கருதுவதேயாகும். மற்று இந்து சமயத்தவர்களோ உருதுவை முற்றிலும் வெறுக்கின்றார்கள். அதற்குக் காரணம் உருதுமொழி மகம்மதிய சமயத்தை வளர்ப்பதற்கேற்பட்ட மொழி என்று அவர்கள் கருதுவதேயாகும். இவர்களிருவரையும் ஒன்றுபடுத்தும்பொருட்டுக் காந்திப் பெரியார் இந்தி மொழியில் சில சமஸ்கிருதச் சொற்களை நீக்கி அவற்றிற்குப் பதிலாக உருது மொழிச் சொற்களைப் பெய்து அக்கலப்பு மொழிக்கு 'இந்துஸ்தானி' எனப் பெயரிட்டு அதுவே இந்தியப் பொது மொழி எனவும் அதை நாகரி எழுத்து வடிவிலும் உருது எழுத்து வடிவிலும் ஒவ்வொருவரும் கற்கவேண்டும் எனவும் சொல்லி வருகின்றார். இஃது அரசியில் சூழ்ச்சியே யல்லாமல் பிறிதன்று.

ஆனால் மகம்மதியத் தலைவர்கள் தூய உருதுவையே வளர்க்கவும் பரப்பவும் விரும்புகின்றனர். அவர்கள் இந்துஸ்தானியைப் பொது மொழியாக ஏற்றுக் கொள்ளவில்லை. இந்து சமயத் தலைவர்களோ தூய இந்தி மொழியையே வளர்க்கவும் பரப்பவும் விரும்புகின்றனர். இவ்விரு சமயத்தலைவர்களும் செய்த கிளர்ச்சியின் காரணமாக அனைத்திந்திய வானொலி நிலையத்தில் இந்துஸ்தானியில் மட்டும் செய்தி பரப்புவதை நிறுத்தித் தூய இந்தியிலும் தூய உருதுவிலும் தனித் தனியே செய்தி பரப்புதல் வேண்டுமென்று சர்தார் பட்டேல் தீர்ப்பளித்தார். எனவே மேலே கூறியவற்றால் இந்தி பொதுமொழி யாதற்கு இடமே இல்லை.

இந்தி மொழியினால் செத்துப் போன சமஸ்கிருதத்திற்கு ஆக்கம்

தமிழினமொழிகளாகிய தெலுங்கு, கன்னடம், துளு, மலையாளம் ஆகிய மொழிகளைத் தமிழினின்றும் பிரித்தது சமஸ்கிருதமே. அவற்றிற்குச் சமஸ்கிருத இலக்கணத்தினடியாகவே இலக்கண நூல்கள் செய்யப்பட்டுள்ளன. ஆதலால் தமிழ் இயல்புக்கு அவை பெரிதும் வேறுபடலாயின.

ஒன்பதாம் நூற்றாண்டிற்குப்பின் தமிழ் மொழியில் ஏராளமான சமஸ்கிருதச்சொற்களை வலியப் புகுத்திவிட்டனர் வடமொழியாளர். தமிழ்நாட்டு ஊர்ப் பெயர்களையும் திருக்கோயில்களில் இறைவன் இறைவியர் பெயர்களையும் வடமொழியில் மொழிபெயர்த்து விட்டனர். அதனால் தமிழ் மக்களின் பெயர்களில் நூற்றுக்குத் தொண்ணூற்றைந்துக்குமேல் வடமொழிப் பெயர்களாக மாறிவிட்டன. தமிழ் இல்லங்களின் பெயர்களும் தொழில்நிலையப் பெயர்களும் வடமொழிப் பெயர்களாகத் திரிந்து விட்டன தேவார திருவாசகச் செந்தமிழ்த் தெய்வத் திருவருட்பாடல்களால் சிறப்புப் பெற்ற திருக்கோயில்களில் அப்பாடல்கட்கு இடமில்லை. தமிழ் மக்களின் சடங்குகள் தமிழில் செய்யப்படவில்லை.

திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய வேண்டுமென்றால் எதிர்ப்பு. தமிழ் மக்கட்குத் தமிழ்ப்பாட்டுத்தான் வேண்டுமென்றால் எதிர்ப்பு. கலைச் சொற்கள் தமிழில் ஆக்கப்படவேண்டு மென்றால் எதிர்ப்பு. பாட நூல்கள், செய்தித்தாள்கள் முதலியன பிறமொழி கலவாமல் எழுதப்பட வேண்டுமென்றால் எதிர்ப்பு. இந்திய நாட்டு வரலாற்று நூல்களில் உண்மைக்கு மாறாகத் தமிழர் நாகரிகத்தை இழித்துக் கூறியது தவறு என்றால் எதிர்ப்பு

தமிழைத் தாய் மொழியாகவுடைய தமிழ் மக்களில் ஒரு சிலர் தமிழைப் புறக்கணிக்கின்றனர். வாழ்வுக்கு ஒரு சிறிதும் வேண்டாத சமஸ்கிருதத்தைப் பாராட்டுகின்றனர். திருக்குறளைப் போன்ற தூய செந்தமிழ் நூல்கட்கு வடமொழி மூலம் கற்பிக்கின்றனர். ஆணி, நிலையம், நீர், மீன், முகம் போன்ற தூய செந்தமிழ்ச் சொற்களைச் சமஸ்கிருதச் சொற்களென் அழி வழக்காடுகின்றனர். தமிழ் மொழி பேசுகிற நாட்டைத் தமிழ் நாடு என்றால், இல்லை இல்லை, அதனை 'ஆரிய வர்த்தம்' என்பதற்கே ஆதாரம் இருக்கிறதென்கின்றனர்.

இந்தி மொழியைத் தமிழ் நாட்டில் பரப்புதல் வேண்டுமென்று மடிகட்டி முயன்றுவருபவர் தமிழ் நாட்டில் உடன்

பிறந்தே கொல்லும் நோய் போன்றுள்ள சமஸ்கிருதப்பித்து டையவரேயாவர். சமஸ்கிருதச் சொற்கள் மிகவும் கலக்கப் பெற்ற இந்தி மொழி தமிழ்நாட்டிற் பரவுதற்கு இடங்கொடுத் தல் செத்துப்போன சமஸ்கிருதத்திற்கு மீண்டும் ஆக்கந் கொடுத்துத் தனித்தமிழ் வளர்ச்சிக்கு வழிவழிக் கேடு செய் வதே யாகும்.

ஆங்கிலம் உலகப் பொதுமொழி

தமிழ் நாட்டில் ஆங்கில மொழியைக் கல்வித் திட்டத்தில் அடியோடு ஒழிக்க வேண்டுமா என்பது ஆராய்ந்து முடிவு கட்ட வேண்டிய தொன்றாகும். ஆங்கிலத்தில் பொறிக்கலை, மருத்து வக்கலை, தொழிற்கலை, சட்டக்கலை, பொருள் நூற்கலை, மற்றும் அறிவியற்கலைகளில் பல பிரிவுகள் முதலியன திருந்திய நூல் களாக எழுதப்பட்டு வந்திருக்கின்றன. உலகில் பலமொழிக் கலையறிவும் பல நாட்டு வரலாறும் ஆங்கிலத்தில் எழுதப்பட்டி ருக்கின்றன. ஆங்கில மொழியின் வாயிலாக உலகிலுள்ள எப் பொருளையும் எளிதிலே அறிந்துகொள்ள முடியும். நம் நாட்டில் ஆங்கிலக் கல்வி நூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேல் நிலைபெற்று விட்டது. உலகத்தில் வணிகத்துறையில ஆங்கில மொழியே பெரும்பான்மையாய்ப் பயன்பட்டு வருகின்றது. உலகத்தில் பெரும்பான்மையோரால் பேசப்படுவது ஆங்கிலமே அதுவே உலகப் பொது மொழியாக இருத்தற்கு எல்லா வகையிலும் தகுதி உடையதென உலகம் ஒப்புகின்றது.

அறிவியல் ஆராய்ச்சி முன்னேற்றத்தினால் உலகில் பல் வேறு பகுதிகளில் இருக்கின்ற மக்கள் மிக்க அருகில் இருக் கிறவர்கள்போல் காணப்படுகின்றனர் உலகில் எந்த மூலையிற் பேசப்படுவதையும். நடக்கிற நிகழ்ச்சியையும் இருந்த இடத்தி லிருந்தே கேட்கலாம், காணலாம். நெடுந்தொலைவிற்கு மிகச் சுருங்கிய காலத்திற் போய்ச் சேரலாம்.

திரு இராசகோபாலாச்சாரியார் 29—11—46ல் அனைத் திந்திய வானொலியில் பேசிய பேச்சு இங்கே கருதற்பாலது.

"செய்திப் போக்கு வரவுகளின் மிகுவிரைவுத் தன்மையி னால் இன்று உலகிலுள்ள நாடுகள் அனைத்தும் ஒரே குடும்பம் போல் காணப்படுகின்றன. அக்குடும்பத்தில் பகைமை ஒழிந்து நட்பும் ஒற்றுமையும் நிலவவேண்டிய காலம் வந்துவிட்டது. விஞ்ஞானம் எல்லா நாட்டினர்க்கும் எப்படிப் பொதுவோ அப் படியே கல்வியும் பண்பாடும் பொதுவாய் அமைய வேண்டும் உலகப் பொதுமுறைக் கல்வியை அமைப்பதற்கு 'உலகப் பொது மன்றம்' ஒன்று ஏற்படுதல் வேண்டும்" (தந்தி 1—11 —46)

இவர்கள் பேசிய பேச்சுக்களிலிருந்து உலகப் பொது மொழி ஒன்று வேண்டுமென்று வலியுறுகின்றது. அஃது ஆங்கில மொழியாகவே இருக்க வேண்டுமென்பதுதான் திரு. ராஜாஜியவர்களுடைய கருத்துமாகும். ஆனால் தாய்மொ ழிக்குக் கேடில்லாதவகையில் ஆங்கிலக் கல்வி இலக்கியமாக மட்டும் பள்ளிகளில் முதற் பாரத்திலிருந்து கற்றுக் கொடுக்கப் படல் வேண்டும்.

தாய்மொழிக் கல்வி

ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டு மக்களுக்கு அவர வர்கள் தாய்மொழியிலேதான் கீழ்வகுப்பிலிருந்து உயர்ந்த வகுப்பு முடியக் கல்வி பயிற்றுதல் வேண்டும் என்பது உலகி லுள்ள அறிஞர் எல்லோரும் ஒப்பக் கூறி வருவதாகும். நாகபுரிப் பல்கலைக் கழகப் பரிசளிப்பு விழாவில் 30—11—46ல் சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்களும் தாய்மொழியிலே தான் கல்வி பயிற்றுதல் வேண்டுமென்றும் அப்படியானால்தான் அறிவு விரைவில் வளர்ச்சியடையும் என்றும் கூறியுள்ளார். மேலும் அவர் அடியிற் கண்டவாறு பேசிய பேச்சுப் போற்றுதற்குரியது.

" நம்முடைய பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் தாய் மொழியிலேயே கல்விபயிற்ற வேண்டும் என்பதனால் வேற்று மொழியை விருப்பவில்லை என்று பொருளாகாது. உலகில் எந்த நாடும் தனித்து வாழ முடியாது. ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு

வேற்றுமொழி யறிவு மிகவும் இன்றியமையாதது. ஆனால் ஒரு நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் வேற்று நாட்டினருடன் தொடர்பு கொண்டிருக்கமாட்டார்கள் ஒரு சிலரே தொடர்பு வைத்துக்கொள்வார்கள் அவர்கள் மட்டுமே வேற்றுமொழியைப் பயில வேண்டும். உலக அறிவைப் பல துறைகளிற்பெற விரும்புபவர்களுக்கும், வேற்று நாடுகளுக்குச் சுற்றுப்பயணஞ் செய்ய விரும்புபவர்களுக்கும், வேற்று நாடுகளோடு வாணிகஞ் செய்ய விரும்புபவர்களுக்கும் வேற்று மொழியறிவு மிகவும் இன்றியமையாததாகும். அப்படிப்பட்டவர்கள் ஒரு நாட்டில் ஒரு சிலரே இருப்பார்கள்.

"வேற்று மொழிகளிலுள்ள சிறந்த நூல்களை ஒவ்வொரு நாட்டினரும் தம் தாய் மொழியில் மொழிபெயர்ப்பதற்கு வேற்றுமொழிகளை நன்கு கற்ற அறிஞர் சிலர்வேண்டும். வேற்று மொழி நூல்களை நம் தாய் மொழியில் நன்கு பயில்வதால் அறிவு முன்னேற்றத்திற்குச் சிறந்த வழியாகும். இதற்காகவே அயன் மொழிகளைப் பயில்வதும் அயல் நாடுகளுக்குச் சுற்றுப்பயணஞ் செய்வதும் மிகவும் முதன்மையாகும். வேற்று மொழிகளைத் திருந்தக் கற்ற அறிஞர்களை ஒவ்வொரு நாட்டரசினரும் நன்கு போற்றுதல் வேண்டும்"

திரு-பட்டேல் அவர்கள் பேச்சினால் தமிழ் நாட்டிலுள்ள மக்கள் ஒவ்வொருவரும் இந்தி மொழியைக் கட்டாயமாய்க் கற்க வேண்டுமென்பதில்லை என்பதும், வடநாட்டுக்குச் செல்ல விரும்பும் ஒரு சிலர் அதனைக் கற்றாற்போதும் என்பதும் வலியுறுகின்றன. தமிழ் நாட்டில் கீழ்வகுப்பு முதல் கல்லூரிமுடிய எல்லாப் பாடங்களையும் தாய் மொழியிலேயே கல்வி பயிற்றுதல் வேண்டுமென்பதும், ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாக அமைக்க வேண்டு மென்பதும், ஏனைய அயன் மொழிகளைக் கல்லூரிகளில் விருப்பப் பாடமாக அமைக்கவேண்டுமென்பதும் பெறப்படுகின்றன.

தமிழ் நாட்டில் தாய்மொழியிலேயே நூற்றுக்குத் தொண்ணூறு பேர் எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கின்றார்கள். வயிற்றுப் பிழைப்புக்காக அரசியன் மொழியாகிய ஆங்கிலத்தைப்

பெரும் பொருட் செலவுசெய்து நீண்டகாலம் வருந்திக் கற்கின்றனர். தாய் மொழியை ஒரு சிறிது நேரமே வேண்டா விருப்பாய்க் கற்கின்றனர். அதனால் அவர்கள் தாய் மொழியில் பிழையின்றிப் பேசவும் எழுதவும் ஆற்றல் இல்லாதவர்களாகவும், உயர்ந்த செந்தமிழ் இலக்கியங்களைக் கற்றுப் பொருள்காணும் வன்மையில்லாதவர்களாகவும் இருக்கின்றனர். ஆங்கிலம் படித்த தமிழ் மக்கள் தமிழை நன்ருய்க் கல்லாமையால் ஆங்கில மொழி நூல்களின் கருத்துக்களைத் தம் நாட்டவருக்குத் தமிழ் மொழியில் விளக்கிக் கூறும் ஆற்றலிலாதவராகின்றனர். தமிழ்ச் செய்தித்தாளாசிரியர்கள் தமிழிலக்கண இலக்கியங்களை முறையாகக் கல்லாமையால் பிறநாட்டு உயர்ந்த கருத்துக்களைச் செவ்வனே விளக்கி எழுதும் வன்மையிலராயிருக்கின்றனர். பிற நாட்டுக் கருத்துக்களை யெல்லாம் ஆங்கிலத்தில் நினைப்பதால் தமிழில் பேசும்போது தெளிவாகப் பேசக்கூடவில்லை. தமிழ் மக்கள் ஒருவர்க் கொருவர் பிழையில்லாமல் கடிதம் எழுதக் கூடாதவர்களாயிருக்கின்றனர். அழைப்புத்தாள்கள் அறிக்கைப் பலகைகள், விற்பனை, ஈடு முதலிய முறிகள், (பத்திரங்கள்), செய்தித்தாள்கள், அரசியலறிக்கைகள், பாடநூல்கள், வினுத்தாள்கள் முதலியவற்றிலெல்லாம் கணக்கிலாப் பிழைகள் காணப்படுகின்றன. தமிழ்க் கல்வி இங்ஙனஞ் சீர்கேடுற்றிருக்கிற நிலையில் இந்தி மொழிப் பயிற்சியை விடுதலை வேட்கையில் பள்ளிகளில் நுழைப்பது தமிழ்ப் பயிற்சிக்கு மேலும் கேடு சூழ்வதேயாகும்.

மாகாணப் பிரிவினையும் கல்வி முறையும்.

இந்தியாவில் மொழிவாரி மாகாணங்கள் பிரிக்கப்படும் என்பது அண்மையில் எதிர்பார்த்தற்குரியது. அப்பொழுது தமிழ் மாகாணமும் பிரிக்கப்படும். பிரித்த பின்னர் தமிழ் மக்கள் தங்கட்குரிய கல்வி முறை எப்படி யிருக்கவேண்டுமென் பதை ஆராய்ந்து முடிவு செய்வர் அப்போது அவர்கள் தமக்கு இந்தி மொழிப் பயிற்சி வேண்டுமா வேண்டாமா என்பதையுங் கருதுவர். எனவே மாகாணப் பிரிவினைக்கு முன் இந்தியைப் பள்ளிகளில் அதிலும் கீழ் வகுப்புக்களில் தமிழறிவு நிரம்பப் பெருத நிலையில் பாடமாக வைப்பதும் அதற்குப் பொருட்செலவு

செய்வதும் வீணாகுமன்றோ? மாகாணப் பிரிவினைக்குப்பின் தமிழ் மக்கள் இந்தி கற்க வேண்டுமென்று விரும்பினால் இந்தியைச் சொல்லித் தருபவர் யாராயிருத்தல் வேண்டும்? அதில் என்ன என்ன நூல்களைச் சொல்லிக் கொடுக்கவேண்டும் என்பனவாகிய வற்றை வரையறை செய்வர். இப்போது இந்தியின்வழித் தமிழர் பண்புக்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளைத் தமிழர் அல்லாதாரைக் கொண்டு சொல்லிக் கொடுப்பது பெரிதுங் கண்டித்தற்குரியதாகும்.

தமிழ் மக்கள் முடிவு செய்யவேண்டியவை

(1) தமிழ் மாகாணத்தைப் பிரிக்கும்வரை தமிழ் நாட்டுப் பள்ளிகளில் இந்தி மொழியைப் பாடமாக வைத்து அதற்கு ஒரு சிறு தொகைகூடச் சென்னை அரசாங்கம் செலவு செய்யக் கூடாதென்று தீர்மானம் செய்து கல்வி அமைச்சர் (Education Minister to the Government of Madras, Fort St. George, Madras) அவர்களுக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

(2) தமிழ் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தாய் மொழியில் எழுதப் படிக்கத் தெரியாதிருக்கின்ற நிலையில், அவர்கள் கண்ணைத் திறப்பதற்குக் கட்டாயக் கல்வியும் முதியோர் கல்வியும் ஏற்படுத்திப் பொருள் செலவுசெய்வதை விடுத்து அயல் நாட்டு இந்தி மொழியைப் பள்ளிகளில் வைத்து அதற்குப் பெரும் பொருள் செலவிடுவதுபற்றிச் சென்னை அரசினரைத் தமிழ் மக்கள் பெரிதுங் கண்டிக்கிறார்கள் என்று தீர்மானம் நிறைவேற்றி யனுப்பித் தொடர்பாகக் கிளர்ச்சி செய்தல் வேண்டும்.

(3) தமிழை முதல் மொழியாகவும் அரசியல் மொழியாகவும் அமைப்பதோடு அதற்கேற்பப் பாடத் திட்டங்களை செப்பஞ்செய்து அமைக்குமாறும், தமிழாசிரியர்களின் நிலையையும் ஊதியத்தையும்உயர்த்துமாறும் மற்றொரு தீர்மானம் செய்து அனுப்பி வைத்தல் நன்றாகும்.

பெருமாள் வடக்குத் தேர்த் தெரு
திருநெல்வேலி
18—12—1946

இங்ஙனம்,

நக்கீரர் தனித்தமிழ்க் கழகத்தார்

கணேசன் தி-லி பாலம். P.I.C. No. 50. 19-12-'46 Cs. 1000